பக்கங்கள்: 8

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 மார்கழி 15 சனிக்கிழமை (30-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 34

## அரசியல் நிலைமையை தெளிவுபடுத்துகிறார் பாலசிங்கம்

# இனி அரசுடன் பேசுவதானால் அது சர்வதேச மத்தியஸ்தத்துடனேயே!

## ஆக்கிரமிப்புப் படைகள் அதற்குமுன் வெளியேற வேண்டும்

— கிளிநொச்சியிலிருந்து விசேட செய்தியாளர்

கிளிநொச்சி, டிசம்பர் 30

**சந்திரிகாவுடனான பேச்சுவார்த்தை கதவுகள் இறுக மூடப்பட்டுவிட்டன. இனி நடைபெறும் பேச்சுவார்த்தைகள் சர்வதேச மத்தியஸ்தத்துடனேயே இடம்பெறும். அப்படி பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முன் ஆக்கிரமித்த இராணுவம் வெளியேறி அங்கு மக்கள் மீளச்சென்று குடியமரவேண்டும்.**

**ஆக்கிரமித்த இராணுவம் வெளியேறி, மக்கள் மீளவும் தங்களின் சொந்த இடங்களுக்கு சென்றதன் பின்பே பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்.**

**— இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் நேற்று கிளிநொச்சி, டிப்போச் சந்தியில், லெப்டினன்ட் கேணல் சந்திரன் சிறுவர் பூங்காவில் கருத்துரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.**

கருத்தரங்கில் பெரும் எண்ணிக்கையான அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய நெருக்கடி கால நிலைமைகுறித்தும், அரசியல் நிலைமை குறித்தும் விடுதலைப் புலிகளின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும் திரு. பாலசிங்கம் கருத்தரங்கில் விவரித்துக் கூறினார்.

சந்திரிகா அரசுடன் ஏற்கனவே நடந்தபேச்சுவார்த்தை அது முறிவடைந்ததற்கான காரணங்கள் போன்றவற்றையும் விளக்கிக் கூறிய திரு. பாலசிங்கம் சந்திரிகாவின் அரசியல் சூழ்ச்சிகள் பற்றியும் தெளிவுபடுத்திக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

யாழ்ப்பாண வரலாற்றில் வீழ்ச்சியும் எழுச்சியும் மாறி மாறி நடந்து வந்துள்ளன. பல நூற்றாண்டு காலத்தில் அந்நிய நாடுகள் பலவற்றிடம் யாழ்ப்பாணம் வீழ்ச்சி கண்டுள்ளது. சிங்களவர்கள் கூட, யாழ்ப்பாண ராச்சியத்தை கைப்பற்றி அரசாட்சி நடத்தியுள்ளனர். இது எல்லாம் பழைய வரலாறு.

இப்போது பல்லாயிரக் கணக்கான படைகளுடன் சிங்கள ராணுவம், மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை — வனாந்தரப் பிரதேசமாகக் காட்சியளிக்கும் யாழ்ப்பாணத்தை — பிடித்து வைத்துக் கொண்டுள்ளது.

இந்த வெற்றியை சிங்கள இனவாதிகளும், சிங்கள அரசினரும் பெரிதாகப் பீற்றிக் கொண்டு வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டதாக கூக்குரலிடும் செயல் சந்திரிகாவின் அரசியல் தந்திரோபாயத்துக்கு கிடைத்த தோல்வி என்பது உலகம் அறிந்த விடயமாகும்.

தமிழக மக்களின் எழுச்சி

யாழ்ப்பாணத்தைப் பறிகொடுத்த நிகழ்வானது தமிழீழ மக்களுக்கு சில சாதகமான அம்சங்களையும் தந்துள்ளது.

தமிழகத்தில் இப்பொழுது, தமிழீழ மக்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பப்படுகிறது. அங்கு தமிழீழ மக்களுக்கு ஆதரவான உணர்வலை, எழுச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

அதுமட்டுமன்றி, சர்வதேச உலகம் தமிழீழ மக்களின் நிலை குறித்து தட்டிக் கேட்கும் நிலைமையும் உருவாகி வருகிறது.

வலிகாமத்தில் இருந்து ஒட்டு மொத்தமாக மக்கள் வெளியேறியதானது விடுதலைப் போராட்டத்துக்கு மக்களால் வழங்கப்பட்ட உயர்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்தோரின் தபால்கள் வன்னிக்கு!

சாவகச்சேரி, டிச. 26

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து சென்று வன்னியில் தங்கியுள்ளவர்கள் தமது தபால்களைப் பெற விசேட வசதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். தபாலக அதிபர் திரு. எஸ். கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இரு தடவைகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட தபால்கள் யாவும் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் —

பொதுமக்களால் கோரப்படாத ஏராளமான தபால்கள் தேங்கிக் கிடப்பதாகவும் — அவர் தெரிவித்தார்.

வன்னியில் உள்ளவர்கள் தமக்கு அருகில் உள்ள தபாலகங்களில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்தால் அவர்களுக்குரிய தபால்களை வன்னிக்கு அனுப்பி விநியோகிக்க வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## கிளிநொச்சி அரச ஊழியர் சம்பளம் இன்னும் இல்லை

கிளிநொச்சி, டிச. 30

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க திரவப்பணம் எடுத்துச்செல்ல பாதுகாப்பு அமைச்சு இன்னமும் அனுமதி வழங்கவில்லை,

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. எஸ், தில்லைநடராசா இதனைத் தெரிவித்தார்.

இதன் காரணமாக குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்த கிளிநொச்சிக்கு வந்த அரசாங்க ஊழியர்கள் மட்டும் அல்ல, ஏற்கனவே கிளிநொச்சியில் கடமையில் இருந்த அரச ஊழியர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து சென்ற அரச ஊழியர்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அலுவலகங்களில் இணைக்குமாறு பொது நிர்வாக அமைச்சு பணித்திருந்தது.

ஆனால் அவர்களின் சம்பளத்தை உறுதிசெய்ய அவர்களின் உயர் அதிகாரிகள் அங்கு இல்லாதது மற்றொரு பிரச்சினை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் இன்று முதல் வழங்கப்படும்

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கான 3 ஆம், 4 ஆம் கட்ட இரண்டு வார உலர் உணவு நிவாரணம் இன்று முதல் வழங்கப்படும் என்று செயலக உணவுப்பகுதி அதிகாரி தெரிவித்தார்.

கடந்த கட்ட நிவாரணம் பெற்ற ப. நோ. கூ. சங்கக் கிளையில் நிவாரணத்தை பெறச் செல்லுமாறும் —

கிளை மாற்றம் ஏதும் இருப்பின் அது தொடர்பான விவரத்தை அங்கு பணியில் இருக்கும் செயலக உத்தியோகத்தர் தெரிவிப்பார் என்றும்— அந்த அதிகாரி கூறினார்.

''இ'' அட்டை வைத்திருப்போருக்கு இலவசமாகவும் —

''உ'' அட்டை வைத்திருப்போருக்கு பணத்துக்கும் — பொருள்கள் வழங்கப்படும்.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா வகைகள் வழங்கப்பட உள்ளன. (இ-3)

## கதிரவெளியில் குண்டுவீச்சு

சாவகச்சேரி, டிச. 30

மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதியில் மக்கள் கூடி நின்ற பகுதி மீது ஸ்ரீலங்கா வான் படையின் 'புக்காரா' விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் முத்துலிங்கம் என்பவர் காயமடைந்தார்.

அதேவேளை —

மட்டக்களப்பில் மாவடிவேம்பு என்ற கிராமத்தில் உள்ள வீடு ஒன்றின் முற்றத்தில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் வீரக்குட்டி சுந்தரலிங்கம் (65 வயது) என்பவர் மரணமானார்.

(இ-3)

## இராணுவ அதிகாரிகள் இருவருக்கு மட்டக்களப்பில் பார்சல் குண்டு

### செயலிழக்க வைக்கப்பட்டதாக தெரிவிப்பு

கொழும்பு, டிச. 30

மட்டக்களப்பு பகுதியில் உள்ள இரு ராணுவ அதிகாரிகளுக்கு பார்சலில் அனுப்பப்பட்ட குண்டுகள் செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதே பாணியில் மட்டக்களப்பில் உள்ள ரெலோ இயக்க உறுப்பினர் ஒருவருக்கு நத்தார் வாழ்த்து மடல் அனுப்பப் பட்டது தெரிந்ததே.

வாழ்த்து மடலைத் திறந்த போது குண்டு வெடித்ததால் மூன்று விரல்களை அவர் இழந்தார்.

ராணுவ அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட பார்சலில் ஏழு அவுன்ஸ் நிறை[illegible] வெடிபொருளும், வெடிக்க வைக்கும் உபகரணமும், [illegible] பற்றறியும் வைக்கப்பட்டிருந்ததாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

இத்தகைய குண்டுகள் வெடிக்கும் போது பார்சலை பிரித்தவர் தனது கையை இழக்கும் நிலை ஏற்படும் என்றும் —

[illegible] படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுதல்

தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்யத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வாணிபம் செய்யும் அனைவருக்கும்.

01-01-1996 க்கு பின் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் அத்தியாவசிய வணிக நிலையங்கள் தவிர்ந்த அனைத்து வணிக நிலையங்களும் பூட்டப்படும்.

குறிப்பு:- ஊழியர், மேலதிக கொடுப்பனவு சம்பந்தமாக ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தென்மராட்சி
வணிகர் மன்றங்களின் ஒன்றியம்
(39862)

சுன்னாகம்

## பல நோ. கூ. சங்கம் (வ-து)

வலிகாமம் தெற்கு பாவனையாளர் கவனத்திற்கு,

### 3 ஆம் கட்ட இடம் பெயர்ந்தோர் நிவாரணப் பொருள்கள் விநியோகம்

29-12-95 தொடக்கம் இரு வாரங்களுக்காக நிவாரணப் பொருள்கள் விநியோகம் கீழ்க் காட்டப்பட்டுள்ள எமது விற்பனை நிலையங்களில் நடைபெறுகின்றது. வலிகாமம் தெற்கை நிரந்தர இருப்பிடமாகக் கொண்ட பாவனையாளர்கள் தற்போது இடம் புலர்ந்து வசிக்கும் இடங்களுக்கு அண்மையில் இருக்கும் விற்பனை நிலையங்களுக்குச் சென்று, தங்களுக்குரித்தான பொருள்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு முத்திரை இலக்கம் 29 பி, 30ஏ, 30பி ஆகியவற்றுக்கான பொருள்களும் வழங்கப்படுகின்றது.

| விற்பனை நிலைய இல. | அமைந்துள்ள இடம். |
|---|---|
| 01 | பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. |
| 02 | சாவகச்சேரி மகளிர் கல்லூரி முன்பாக, சாவகச்சேரி. |
| 03 | தீலீபன் வீதி, சரசாலை மத்தி, சரசாலை. |
| 04 | கல்வயல் மத்தி, 1 ஆம் கட்டை, கல்வயல். |
| 05 | பிலீப் வீதி, மட்டுவில் மத்தி. |
| 06 | இலுப்பையடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு. |
| 07 | உசன் கந்தசாமி கோவில் முன்றல், மிருசுவில். |
| 08 | மீசாலை புகையிரத வீதி அருகாமை, மீசாலை. |
| 09 | மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், மறுவன் புலவு, கைதடி, நாவற்குழி. |
| 10 | பருத்தித்துறை வீதி, கொடிகாமம் சந்தி, கொடிகாமம். |
| 11 | சரசாலை வடக்கு, ஸ்ரீகணேச வித்தியாலயம் அருகாமை, சரசாலை. |
| 12 | கட்டைவேலி சனசமூக நிலையம் அருகில், கரவெட்டி. |
| 13 | கைதடிச் சந்தி, கைதடி. |
| 14 | கதிரவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி, பருத்தித்துறை. |

29-12-95 பொதுமுகாமையாளர்
(சி/3003)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 17 — 05 — 1944



அழிப்பு: 02 — 01 — 1993

### உயர்திரு ஆறுமுகம் தர்மராஜா
(உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி)

திதி: 30 - 12 - 1995

பண்பான நாயகனாய், அன்பான தந்தையாய் அரியசகோதரனாய், குடும்ப ஒளிவிளக்காய் எல்லோர்க்கும் நல்லவனாய், சமூக சேவையின் கொடிமரமாய், நின்று கடமையே கண்ணென மதித்து இன்னுயிர் ஈந்த சான்றோன் தர்மராஜனே! நின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைக் கைகூப்பிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்றும் இன்றும் என்றும் நீங்காத
உம் நினைவில் ஆறாத் துயருறும்:

மனைவி, மக்கள், பெற்றோர்,
உற்றார், உறவினர் அனைவரும்

நுணாவில் கிழக்கு
சாவகச்சேரி.
(39869)

## தமிழீழ வைப்பக பரீட்சை

தமிழீழ வைப்பகத்தின் இளநிலை எழுது விளைஞர் அல்லது உதவிக் காசாளர் பணிநிலைகளுக்கான எழுத்துப் பரீட்சை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும், கிளிநொச்சி மகா வித்தியாலத்திலும் நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இதுவரை பெறத்தவறியவர்கள் இன்று காலை 9 மணிக்கு பரீட்சை மண்டபத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டுவில் பிரதேச வலயம்

மட்டுவில், டிச. 30

மட்டுவில் பிரதேச வலயத்திலுள்ள சகல கிராம அலுவலகர்கள், வெளிக்கள அலுவலர்கள், மற்றும் வலயத்திலுள்ள அலுவலர்கள் ஆகியோரை இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிரதேசச் செயலர்வலய அலுவலகத்துக்கு சமூகமளிக்குமாறு மட்டுவில் வலய மேலதிக உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ-7)

## டாக்டர்கள் பற்றாக்குறை

தென்மராட்சி, டிச. 30

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் பல் சிகிச்சை நிலையத்தில், பல் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

தினமும் நூற்றுக்கு மேற்பட்ட பல் நோயாளர்கள் இங்கு சிகிச்சைக்காக வருகின்றனர். ஆனால் இரண்டு டாக்டர்களே பணிபுரிவதால் நோயாளர்கள் பலமணி நேரம் காத்திருக்க வேண்டி இருக்கிறது. நோயாளிகள் மறுநாள் வருமாறும் பணிக்கப்படுகின்றனர்.

இந்த இரு டாக்டர்களில் ஒருவர் செவ்வாய்க்கிழமைகளில் பளை வைத்தியசாலைக்கு செல்வதால் அத்தினத்தில் ஒரு டாக்டரே சேவையாற்ற வேண்டிய நிலையும் இருந்து வருகிறது. (இ-117)

சங்கானை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வ. உ]

''வலிமேற்குப் பிரதேசத்தில் இயங்கி வந்த சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிளைகள் நடத்த வாடகைக்குக் கட்டடம் வழங்கிய உரிமையாளர்களுக்கு 31-10-95 ற்குப் பின் வாடகை வழங்கப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

தலைவர்
சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

29-12-95 (C/2929)

## விசுவாசிகளே!

மாங்குளத்தில் முக்கால் ஏக்கர் காணியுடன் குடிசை அமைத்துக் கொடுக்கின்றோம்.

தொடர்பு:
போதகர், சிவப்பிரகாச வித்தியாசாலை,
தும்பளை, பருத்தித்துறை.

### அசம்லி ஒப் கோட்

யாழ்ப்பாணம்/மாளிப்பாய்/கிளிநொச்சி.
எபனேசர் சபை, வட்டுக்கோட்டை.
(39865)

## பி.ஜே. பர்னாண்டோ

★ கண்ணாடி வழங்குபவர் ★ பல் கட்டுபவர்



542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஸ்தாபனம் தற்போது கண்டி வீதி, சாவகச்சேரியில் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கிராமிய வங்கி உட்புறம் தெய்வேந்திரா தியேட்டர் முன்பாக.

முக்கிய குறிப்பு:
எமக்கு வேறு கிளைகள் இல்லை.
(39863)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## இறுதியாண்டுப் பரீட்சைகள்

| பரீட்சைகள் | | ஆரம்பமாகும் திகதிகள் |
|---|---|---|
| 1. மூன்றாம் மருத்துவமாணி பகுதி II (மீள்) | — | 08-01-1996 |
| 2. மருத்துவமாணி இறுதியாண்டு | — | 29-01-1996 |
| 3. சித்த மருத்துவம் இறுதியாண்டு | — | 29-01-1996 |
| 4. விஞ்ஞானமாணி (சிறப்பு) 1994 (3 ஆம், 4 ஆம் வருடம்) | — | 19-02-1996 |
| 5. 3 ஆம் வருட விஞ்ஞானமாணி 1994 | — | 19-02-1996 |
| 6. சிறப்புக் கலைத் தேர்வு இறுதியாண்டு 1994 | — | 19-02-1996 |
| 7. பொதுக்கலைத் தேர்வு இறுதியாண்டு 1994 | — | 19-02-1996 |
| 8. இசைக்கலைமணி வாய்ப்பாட்டு/வயலின்/வீணை/மிருதங்கம் | — | 19-02-1996 |
| 9. நாட்டியக் கலைமணி | — | 19-02-1996 |
| 10. கல்விப் பட்டப்பின் டிப்ளோமா முழுநேரம்/பகுதி நேரம் பகுதி I & பகுதி II | — | 19-02-1996 |
| 11. வர்த்தகமாணி பகுதி III 1994 | — | 19-02-1996 |
| 12. வியாபார நிர்வாகமாணி பகுதி III 1994 | — | 19-02-1996 |

ஏற்கனவே திருநெல்வேலியிலுள்ள பரீட்சைக் கிளையில் பரீட்சை விண்ணப்பங்களை சமர்ப்பித்த மேற்குறிக்கப்பட்ட பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் சகல பரீட்சார்த்திகளும் தங்களது விண்ணப்பங்களை மீளவும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள யாழ். பல்கலைகழக தற்காலிக உப - அலுவலகத்தில் அல்லது கிளிநொச்சி விவசாய பீடத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பெற முடியாதவர்கள் தமது பெயர், பதிவிலக்கம், முகவரி, தோற்றவேண்டிய பரீட்சையின் பெயர், பாடங்கள் போன்ற விவரங்களுடன் எழுதி அனுப்பலாம்.

மூன்றாம் மருத்துவமாணி பகுதி II (மீள்) பரீட்சை திட்டமிட்டபடி 08 01-1996 அன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகும். பரீட்சார்த்திகள் ஒரு பாடத்துக்கு ரூபா 50/- வீதம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இயங்கும் பல்கலைக்கழக அலுவலகத்தில் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தி, தமது பரீட்சைக்கான அனுமதி அட்டைகளையும், பரீட்சை நேர அட்டவணையையும் 06-01-1996 ஆம், 07-01-1996 ஆம் திகதிகளில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சித்தமருத்துவம் இறுதியாண்டுப் பரீட்சைகள் 29-01-1996 ஆம் திகதியன்று கைதடியில் அமைந்துள்ள சித்தமருத்துவத்துறையில் நடைபெறும்.

பதிவாளர்
(சி/2928)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவிலுள்ள தற்காலிக முகாமில் பெரும் அவலமுறும் வடபகுதி மக்கள்

## அங்கு தங்கி வந்த அரச அதிகாரி தகவல்

சாவகச்சேரி, டிச. 30

கொழும்பு செல்லும் பயணிகளை தடுத்து வைப்பதற்காக வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாமில் மக்கள் பெரும் அவல வாழ்க்கை வாழ்கிறார்கள்.

குடிக்க அசுத்த நீர், மலசல கூடத்தில் துர்நாற்றம், படுக்க கிழிந்த பாய், கல்லும் முள்ளும் கலந்த மட்டுப்படுத்தப்பட்ட சாப்பாடு, இவற்றுக்கு மேலாக படையினரின் கெடுபிடிகள்.

வவுனியாவில் உள்ள வடபகுதி பயணிகளுக்கான தற்காலிக முகாம் குறித்து மேற்கண்டவாறு அரச சேவையில் உள்ள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த முகாமில் தங்கி நின்ற அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் இருந்து வவுனியா செல்லும் பயணிகள் தாண்டிக்குளத்தில் சோதனை முடிந்ததும் பஸ்களில் ஏற்றப்பட்டு தற்காலிக முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

தற்காலிக முகாம் சென்றதும் அங்கு ''வைத்து சப்பாட்டு அட்டை'' ஒன்று வழங்கப்படுகிறது. 10 நாட்களுக்கு உணவு பெறும் வகையில் அந்த அட்டை அமைந்துள்ளது.

அங்கு புலனாய்வுத்துறை, பொலீஸ், செயலகம் என மூன்று பிரிவுகளில் தனித்தனியாக பயணிகள் விசாரிக்கப்படுகிறார்கள். விசாரணைகள் முடிந்ததும் தொடர்ந்து முகாமிலே தங்க வைக்கப்படுகிறார்கள்.

கற்கள் கலந்த சாப்பாட்டுப் பாசல் வழங்கப்படுகிறது.

கழனித் தண்ணீர் போல தேநீர், படுக்க கிழிந்த பாய். படுக்க இடமில்லையானால் வெளி நிலத்திலும் படுக்க வேண்டியதுதான்.

### சகலரும் ஒரே இடத்தில்

குழந்தைகள், ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், என்ற வேறுபாடின்றி சகலரும் ஒரே இடத்தில் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

வைத்தியர்கள், அரச அதிகாரிகள், மாணவர்கள் என்று பலதரப்பட்டவர்களும் அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மலசல கூடத்துக்கு போக வேண்டுமானால் மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் போகவேண்டும். குடிக்கவோ கைகழுவவோ அசுத்த தண்ணீர்த்தான் கிடைக்கிறது. சிலருக்கு நோய்கூட ஏற்பட்டுள்ளது.

நெருக்கமான இடத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். முகாமைவிட்டு வெளியே செல்ல தினமும் 2மணி நேரம் அனுமதித்த படையினர் தற்போது அதை நிறுத்தியுள்ளனர்.

அங்குள்ள படையினர் மக்களுடன் மோசமாக நடக்கின்றனர்.

பயணி கொடுக்கும் விலாசத்துக்கு தகவல் அனுப்பப்படுகிறது.

பதில் சாதகமாகக் கிடைத்தால் அந்த பயணிக்கு பாஸ் வழங்கப்படுகிறது. அவர் தாண்டிக்குளம் பிறவுண் கம்பனிக்கு வந்து பாஸ் எடுத்து ரயிலில் பயணம் செய்ய முடியும்.

பதில் சாதகமாகக் கிடைக்காவிட்டால், அந்தப் பயணி வேறு இடத்தில் உள்ள முகாமுக்கு அனுப்பப்படுகின்றார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போகலாம் என்று படையினர் அவருக்குத் தெரிவிக்கின்றனர்.

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

# ஆலயங்களில் உள்ளோரை இடமாற்ற முயற்சி

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் தங்கியுள்ள குடும்பங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு பிரதேச செயலகம் நடவடிச்கை எடுத்து வருகிறது.

இந்து ஆலயங்களில் நடைபெறும் திருவெம்பாவை உற்சவத்தையொட்டி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபைகளும், தென்மராட்சி இந்து இளைஞர் ஒன்றியமும் விடுத்த வேண்டுகோளையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

(இ-117)

# வவுனியாவிலிருந்து பணம் எடுத்துவர கொழும்பில் அனுமதி பெறவேண்டும்

வடக்கில் செயற்படும் அரச திணைக்களங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கத் தேவையான பணத்தை வவுனியாவில் இருந்து எடுத்துவர பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்கள் தமது ஊழியர்களுக்குரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்கான பணத்தை அரச அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் வவுனியாவுக்குச் சென்று பிரிகேடியரின் அனுமதியுடன் எடுத்து வர அனுமதிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் கடந்த மாதம் நடந்த மாநாடு ஒன்றில் மேற்கண்ட நடைமுறைப்படி பணம் எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு இணங்கியிருந்தது

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள திணைக்களத் தலைவர்கள் வவுனியாவில் இருந்து வவுனியா பிரிகேடியரின் அனுமதியுடன் தமக்குரிய பணத்தைப் பெற்று வந்தனர்.

இனிமேல் வவுனியாவில் அனுமதி பெற்று வடக்கே பணம் எடுத்துச்செல்ல முடியாது என்றும் —

கொழும்பில் பாதுகாப்பு இணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றால் மட்டுமே பணம் எடுத்துச் செல்ல முடியும் என்றும் — வடக்கில் இருந்து சென்ற திணைக்கள அதிகாரிகளிடம் வவுனியா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட தொகைப் பணத்தை மட்டுமே எடுத்துச் செல்லத் தாம் அனுமதி வழங்கமுடியும் என்று வவுனியா படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 'புரொட்டினெக்ஸ்' பால்மா வாங்கினால் 2 சன்லைட்

## வர்த்தக திணைக்களத்தில் விற்பனை

தென்மராட்சி, டிச. 30

கொடிகாமத்தில் உள்ள வர்த்தக திணைக்கள மக்கள் கடையில் ரூபா 135 பெறுமதியான 'புரொட்டினெக்ஸ்' ஒன்றை வாங்குவோருக்கு இரண்டு சன்லைட் சவர்காரங்களும் ஒரு லக்ஸ் சவர்க்காரமும் இரண்டு சேயாமீற் பக்கற்றுக்களும் கட்டுப்பாட்டு விலைக்கு வழங்கப்படுகின்றன.

புரெட்டினெக்ஸ் ஒன்றை வாங்கினால் சன்லைற் 12 ரூபாவுக்கும், லக்ஸ் 14 ரூபாவுக்கும், சோயாமீற் 12 ரூபாவுக்கும் கிடைக்கும்.

[இ-117]

## பணப் புழக்கம் வெகுவாகப் பாதிப்பு

# தாள்களுக்குப் பதிலாக சில்லறையே கிடைக்கிறது!

யாழ். மாவட்டத்தில் திரவப் பணத்துக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதை அடுத்து பணத் தாள்களின் புழக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

இதனால் தாளாகக் காசு கிடைப்பது மிகவும் கஷ்டமாக மாறிவருகிறது.

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் வர்த்தக நடவடிக்சையில் சில்லறைக் காசுப் புழக்கம் இதனால் அதிகரித்துள்ளது.

காசு கொடுக்கல் வாங்கல்களுக்கு தற்போது பணக் குற்றிகளே பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு ரூபா, இரண்டு ரூபா நாணயக்களை வர்த்தகர்கள் சிறு சிறு மூடைகளாகக் கட்டி பணக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதைக் காணமுடிகின்றது.

ஆயிரக்கணக்கான ரூபாய்க்கு சில்லறைச் குற்றிகள் வழங்கப்படுவதால் சிலர் அவற்றை சிறு மூடைகளாகக் கட்டி சைக்கிளில் எடுத்துச் செல்கின்றனர்.

(ஐ)

# போசாக்கு குறைவு

பளைப் பிரதேசத்தில் உள்ள 19 நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள 420 குழந்தைகள் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பளைப் பிரிவினர் நடத்திய ஆய்வின்போது 195 குழந்தைகளுக்குப் போசாக்குக் குறைவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# பயிரின் உயிர் பிரியாமல்...

*விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி*

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவன் சொல்லி வைத்த பொய்யாமொழிகளில் இதுவும் ஒன்று. இது பொய்க்காது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி வன்னியிலும் இந்தமுறை பருவமழை — நெற்சாகுபடிக்குத் தேவையான மாரிமழை— பொய்த்து விட்டது. அதனால் அடுத்த வருடத்தில் பட்டினி நிலைமை தோன்றும் அபாயம் உண்டு என்பதனை மறந்து விடுவதற்கில்லை.

வலிகாமத்தில் ஐப்பசிக்கு முன்னர் பெய்த சொற்ப மழைக்கு முளைத்த நெற்பயிர்களை காணிகளோடு விட்டுவிட்டு வந்தனர்!

குடாநாட்டு மக்கள் என்றுமில்லாதவாறு இழப்பும், அவலமும், துயரமும உற்றிருக்கும்வேளை பார்த்து இயற்கையும் அவர்களுக்கு எதிராக நிற்கிறது. பெருமளவில் சோதிக்கிறது. பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல தமிழர் நிலை ஆகிவிட்டது.

தென்மராட்சி, வடமராட்சியிலும் மாரிமழை பொய்த்துவிட்டது. அதனால் நெற்பயிர்கள் வாடிவதங்குகின்றன. கருகிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இன்னொரு பிரச்சினையும் இருப்பதாகச் சாவகச்சேரி, மட்டுவில் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் குறைப்படுகிறார்கள். இடம்பெயர்ந்து முகாம்களில் தங்குவோரும், மலசல கூட வசதி இல்லாத வீடுகளில் வாழ்வோரும் வயல் நிலங்களிலேயே மலம் கழிப்பதாகவும் —

அதனால் வயல்களுக்குள் இறங்கி எதுவுமே செய்ய முடியாத கஷ்ட நிலை தோன்றியிருப்பதாகவும் — விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார். அது ஒருபுறமிருக்க —

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் கருகும் நிலையில் உள்ள பயிர்களைப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் ஆராய்ந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஊர் முற்றம் — மயூரம்

இரண்டு பிரதேசங்களிலும் உள்ள குளங்கள், கிணறுகளில் இருந்து நீரைப் பாய்ச்சி பயிர்களின் உயிரைக் காக்கும் வாய்ப்புகள் குறித்து விவசாயிகளுடன் ஆராய்ந்துள்ளார் அரச அதிபர்.

வன்னியிலும் மாரி மழை பொய்த்து விட்டது. அங்கே ஏராளமான குளங்கள் உள்ளன. எனினும் வழமைபோல குளங்கள் நிரம்பவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மிகப் பெரிய குளமான இரணமடுவின் கலிங்குப் பகுதி வரண்டு, காய்ந்து, அடித்தரை தெரியும் காட்சி கண்றாவியாக உள்ளது.

வழமையில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் இரணமடுக்குளம் நிரம்பி வழியும். மடையை — கலிங்கை— திறந்து குளம் உடைக்காமல் பாதுகாத்துக் கொள்வார்கள். தண்ணீர் வீச்சுடன் குதித்துப் பாயும் காட்சி மனதில் குளுமை ஊட்டும். அது வன்னியின் சிறப்பை எடுத்தியம்பும். ஆனால் கடந்த வாரம் அங்கு சென்றபோது மடைக்கு அருகே உள்ள பகுதிகள் பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தன. குளத்தின் அடித்தரை தெரிந்தபோது மனது கனத்தது.

எனினும் கிளிநொச்சியிலும், முல்லைத்தீவிலும் வன்னியின் ஏனைய நிலப்பரப்புகளிலும் ஆங்காங்கே உள்ள சிறிய குளங்களில் கணிசமான அளவு தண்ணீர் உண்டு. இப்போது அந்தக் குளங்களில் இருந்து வாய்க்கால்களுக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டு நெல்வயல்களுக்கு நீர்ப்பாசனம் நடைபெறுகிறது.

அதனால் வன்னியில் நெற்செய்கை பெருமளவில் பாதிக்கப்படும் அபாயம் இல்லை. ஆயினும் சிறுபோக நெற்செய்கையும், கோடை காலத்திலான தோட்டச் செய்கையும் பாதிப்புறும் வாய்ப்புண்டு.

குறைந்த தண்ணீருடன் வளரும் குரக்கன், சோளம் போன்ற தானிய வகைகளை உற்பத்தி செய்வதன் மூலம் பசி, பட்டினி ஏற்படாமல் தடுக்கலாம்.

முயற்சியும், கடும் உழைப்பும் இருந்தால் இயற்கையின் தாக்கத்தையும் வெல்லலாம் அல்லவா?

அதற்கான அறிகுறிகளை வன்னியில் காண முடிந்தது. வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வன்னிக்கு மனமில்லாமல் தான் சென்றார்கள். பழக்கமில்லாத, வசதிகள் குறைந்த புதிய பிரதேசத்தில் தமது வாழ்க்கையைச் சமாளிக்க முடியுமா என்று அவர்கள் அஞ்சியது உண்மைதான்.

ஆனால் சுமார் ஒரு மாத காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் தம்மைப் புதிய சூழலுக்குப் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

கிளிநொச்சி தொடக்கம் மாங்குளம் வரை ஊருக்கு ஊர் வீடுகளிலும் வீதிகளிலும் கொட்டில் போடும் கதையைத் தான் கேட்க முடிகிறது. தனியார் வளவுகள் அங்கு ஏக்கர் கணக்கில் விஸ்தீரணமுடையவை. அதனால் ஒருவரின் வளவில் இடம்பெயர்ந்த பத்துக் குடும்பங்கள் வரை தனித்தனியே கொட்டில்கள் அமைகின்றன. ''கப்பு எடுத்தாச்சு, கம்புகள் வாங்கியாச்சு, கிடுகுதான் பிரச்சினையாக உள்ளது'' என்று பலரும் வீதிகளில் கதைப்பது காதில் விழுந்தது. வவுனியா பக்கத்திலிருந்து கிடுகுகள் வருவதால் அந்தப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று கிளிநொச்சி செயலக வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

விவசாயத்தில் நாட்டமுள்ளவர்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் சிறிய காடுகளை வெட்டி தமக்கென ஒரு காணியாக்கி அதனை கழனியாக்குவதில் தீவிரமாக ஈடுபடுவதைக் காண முடிந்தது. வன்னியின் வளம் விரைவில் ஓங்கும் என்றுமனம் நிறைகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### செங்கல்லு விற்பனைக்கு

எம்மிடம் செங்கல்லு விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ சங்கம், நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (சி/12927)

### மாறியசைக்கிள்

22- 12- 95 இல் சரசாலை ஆதார வைத்தியசாலையில் நிறுத்தப்பட்டிருந்த லுமாலா மகளிர் சைக்கிள் வேறு லுமாலா மகளிர்சைக்கிளுக்கு பதிலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மாறி எடுத்தவர் உடன் தொடர்பு கொள்ளவும். வே. கணேசமூர்த்தி, சரசாலை மத்திய வாசிகசாலையடி, சரசாலை.

(39722)

### சுடரொளி

சுடரொளி இந்து நாட்காட்டி (திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர்) விலை 70/- மட்டுமே வெளியீடு கல்வயல் இந்து இளைஞர் மன்றம். தொடர்பு: திருக்கணித நிலையம் மட்டுவில். (39585)

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோ பிரதிகளைப் பெறவும் அடையாள அட்டைகளை கவரிடவும் சிறந்த இடம்:- கிளீன் கட், நீதிமன்று அருகாமை, சாவகச்சேரி, (39856)

### வீடு தேவை

சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு அல்லது விலைக்கு தேவை, வாடகைக்கு அல்லது விற்க விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள். வீடியோ கலாமினி டச் றோட், சாவகச்சேரி.

(39726)

## தர்மபுரத்தில் மருந்துக்கு தடடுப்பாடு

விசுவமடு டிச. 30

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தர்மபுரம் மத்திய மருந்தகத்தில் மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இம் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் மலேரியா நோயால் 324 பேரும், வயிற்றோட்டத்தால் 103 பேரும், மூளை மலேரியாவால் 27 பேரும் பாதிக்கப்பட்டனர் என்றும்—

இவர்களுக்குப் போதிய மருந்து இல்லாமல் அவர்கள் கிளிநொச்சி மத்திய மருந்தகத்திற்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர் என்றும்— தர்மபுரம் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (இ-36)

# விமானம் சென்னையில் இறங்கியது புலிகளுக்கு ஆயுதங்கள் இறக்கவா?

## அறிக்கை கோருகிறது மத்திய புலனாய்வுக் குழு

கொழும்பு, டிச. 30

மேற்கு வங்காளத்தில் உள்ள புறூனியா என்ற கிராமத்தில் பரசூட் மூலமாக ஆயுதங்களைப் போட்ட ஏ. என் 26 ரக விமானம் இலங்கையில் உள்ள விடுதலைப்புலிகளுக்கு பெருந் தொகையான ஆயுதங்களை விநியோகிப்பதற்கு சென்னை விமான நிலையத்தில் இறங்கியதா?

இது குறித்து விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய புலனாய்வுப் பிரிவு தமிழ் நாட்டில் உள்ள தனது கிளையைக் கேட்டுள்ளது.

இந்த விமானம் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை எடுத்துச் சென்றதா என்பது குறித்தும் மத்திய புலனாய்வுத்துறை விசாரணையை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## தரமற்ற இறைச்சி விற்பனை

சச்சாய், மிருசுவில் ஆகிய இடங்களில் அனுமதியின்றி வெட்டப்பட்ட மாட்டிறைச்சிகள் சீல் பண்ணப்பட்ட இறைச்சியுடன் கலந்து விற்பனை செய்யப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு தரமற்ற இறைச்சியை விற்பனை செய்த இருவர் சுகாதாரப் பகுதியினரால் அண்மையில் எச்சரிக்கப்பட்டதுடன், அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த இறைச்சியும் பறிமுதல்செய்து அழிக்கப்பட்டது.

## அறிவித்தல்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் டிசெம்பர் மாதவேதனத்தை, ஜனவரி 12 ஆம், 13 ஆம் திகதிகளில் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

திருமதி செறின் குருபாதம்
மே/பா பரம் தணிகாசலம்
''தனி''
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

(39793)

## தொடர்பு கொள்ளவும்

நவாலியில் வசித்து வந்த அளவெட்டியைச் சேர்ந்த **பரமேஸ்வரன்** குடும்பத்தினரை **பாலசிங்கம்** தேடுகின்றார், பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

இராசா வெதுப்பகம்,
கண்டி வீதி, பளை.

(39731)

## தவறவிடப்பட்டுள்ளது

கொழும்பிற்கு 11-11-95 இல். பிரயாணம் செய்த ஒருவரின் சூட்கேஸ் தவறவிடப்பட்டுள்ளது. உள்ளே பிரயாணியின் வீட்டு உறுதியும் சேமிப்பு வங்கிப் புத்தகங்களும், பாடசாலை மாணவியின் முக்கிய சன்றிதழ்களும் உள்ளன. இவை யாவும் இப் பிரயாணிக்கு அத்தியாவசியமாக இருப்பதால் தயவு செய்து. இவற்றை கண்டெடுத்தவர்கள். கீழ் காணும் விலாசத்திற்கு ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தர்மிசா ரவல்ஸ்
விமானத் தொடர் அம்பியூலன்ஸ் சேவை
வதனா மருந்தகம்
மீன் சந்தை வீதி, பஸ் நிலையம்,
சாவகச்சேரி,

இவ்விலாசத்திற்கு சென்று கொடுக்க முடியாதுவிட்டால் தயவு செய்து கீழ்காணும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.

திருமதி சிவசக்தி சுந்தரமூர்த்தி
மீசாலை கிழக்கு, மீசாலை.

நன்றி

ந.ச. யோகீஸ்வரன்

(39719)

உரும்பிராய் தெற்கு

## ஐக்கிய நாணய சங்கம்

அங்கத்தவர்களின் கவனத்துக்கு

சகல கொடுப்பனவுகளினதும் தவணை தப்பிய தடவைப் பணங்களை உடன் செலுத்துமாறும், தற்போதைய இருப்பிட விலாசத்தைத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மே/பா திருமதி பொ. இரத்தினம்
பிள்ளையார் வீதி,
(குணம் கடை எதிர்).
மந்துவில், கொடிகாமம்.

க. நல்லைநாதன்
தலைவர்

(39729)

## 6,500 கிலோ பனஞ்சீனி கண்டாவளையில் உற்பத்தி

விசுவமடு, டிச. 30

கண்டாவளையில் இயங்க ஆரம்பித்துள்ள பனஞ்சீனி உற்பத்தி நிலையத்தில் இவ்வாண்டு 6 ஆயிரத்து 500 கிலோ பனஞ்சீனி உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கண்டாவளை பனஞ்சீனி உற்பத்தி நிலையத்தில் மீண்டும் பனஞ்சீனி உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்த பனஞ்சீனி உற்பத்தித் தொழிற்சாலையில் முதல் 6 மாத காலத்துக்கு 5 ஆயிரத்து 500 கிலோ பனஞ்சீனி உற்பத்தி செய்யப்பட்டது.

ஆனால் சாராய உற்பத்தியிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு 34 ஆயிரம் போத்தல் பனம் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 43 ஆயிரம் போத்தல் பனம் சாராயம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

எனினும் இனிவரும் பருவ காலத்தில் 6 ஆயிரத்து 500 கிலோ பனஞ்சீனியை உற்பத்தி செய்ய முடியும் என்று பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்க முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(இ-36

## உடன் தொடர்புகொள்ளவும்

இல. 3, காட்டுக் கந்கோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் வசித்த மேரி றோசலீன் (பொன்னு) என்பவரை காணவில்லை. இவரின் மகள் K. C திருச்செல்வம் கொழும்பில் இருந்து வந்து தேடுகின்றார். இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்வரும் முகவரியில் அறியத்தரவும்.

K- C. திருச்செல்வம் (மகள்),
திருக்குடும்ப கன்னியர் மடம்,
மிருசுவில்.

(39860)

## திரு. ஜெறோம் லோகதாசன் மரியதாசன் அவர்களுக்கு

சுப்பையா மாஸ்ரரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. உடனடியாக சாவகச்சேரிக்கு வந்து பெற்றுக்கொள்ளவும்.

— இராமலிங்கம் மாஸ்டர்

(39861)

## தேடப்படுகிறார்

32 A (54) விதானையார் வீதி, பாண்டியந்தாழ்வு, சுண்டிக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நவமணி தம்பிமுத்து என்பவரை மகன் குணரத்தினராசா தேடுகிறார். விவரம் தெரிந்தோர் தொடர்பு கொள்ளவும்.

த. நவரத்தினராசா,
மே/பா. திருமதி மகேஸ்வரி காசிநாதர்
''ஈஸ்வரி வாசா''
இராசேந்திரம் வீதி,
நுணாவில் கிழக்கு.

(39730)


# தெளிவான போட்டோ பிரதிகளுக்கு

## ★ ஸ்கைலைன்ஸ் ★

யாழ். நகரில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது
இல. 09, நவீன சந்தை, மேல்மாடி (உட்புறம்) சாவகச்சேரியில்
இயங்குகின்றது

(சீ-2923)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## இராணுவ மய திட்டம் இது!

தமிழ்ப் பிரதேசங்களின் அருகருகே உள்ள சிங்களக் கிராமங்களின் ஊர்காவலர் அணியினருக்கு நவீன ஆயுதங்களைக் கையாள்வதற்குப் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இராணுவம், கடற்படை, விமானப் படை, பொலீஸ் படை, இராணுவத் துணைப் படை, தொண்டர் படை ஆகியவற்றுடன் ஊர்காவல் அணியையும் ஓர் ஆயுதப் படையாக்கும் முயற்சியே அவர்களுக்கு நவீன ஆயுதங்களைக் கையாள்வதற்கான பயிற்சி.

எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பை இராணுவத்தினரே அனேகமாகக் கவனித்து வந்தனர். எனினும் அவர்களால் அப்பகுதிச் சிங்கள மக்களுக்கு முழு அளவில் பாதுகாப்பு அளிக்க முடியவில்லை. அத்தோடு இராணுவச் சிப்பாய்களின் சேவை வடக்கு – கிழக்கு போர்க்களத்திலும் பெரிதும் தேவைப்படுகிறது.

அதனால் எல்லைப்புறக் காவலுக்கென்று ஊர்காவலர் அணிகளை நவீன ஆயுதப் பயிற்சிபெற்ற படையாக்குவதற்கு அரசு முனைந்துள்ளது எனலாம்.

இது வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசங்களை மட்டுமன்றி அதன் அயற்பகுதிகளையும் இராணுவ மயமாக்கும் திட்டமாகும்.

தமிழர் பிரதேசத்தை இன்னோரு நாடாகக் கருதுவதாலேயே அதனை அடுத்துள்ள சிங்களக் கிராமங்களை எல்லைப்புறக் கிராமங்கள் என்று அரசு வர்ணிக்கிறது.

தனது எல்லைகளைப் பாதுகாப்புப் பலத்துடன் வைத்திருந்தாலே நிம்மதி என்று அரசு கருதுகிறது. ஊர்காவலர் அணியை மேம்படுத்தி, வளர்த்து ஒரு படையாக்கும் செயற்பாடு அதன் பாற்பட்டதே.

தமிழ்மக்களின் தாயகத்தை இராணுவ ஆக்கிரமிப்புச் செய்வதன் மூலம் அவர்களின் தாயகக் கோட்பாட்டையும், சுயநிர்ணய உரிமை நிலைப்பாட்டையும் இல்லாமற் செய்து, விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட வேண்டும் என்று சந்திரிகா விரும்புகிறார்; நசுக்கி விடலாம் என்று நம்புகிறார்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முழுக்க, முழுக்க ஓர் அரசியல் விவகாரம். இதற்கு அரசியல் தீர்வே உரிய மருந்தாகும்; ஒரே ஒரு மார்க்கமாகும். இது சந்திரிகாவுக்கோ ஏனைய சிங்களத் தலைவர்களுக்கோ தெரியாததல்ல.

எனினும் போரினூடாக சமாதானம் என்ற அழிவுக்கான ஆதிக்கவெறி கொண்ட கோட்பாட்டை சந்திரிகா புதிதாக இயற்றி உள்ளார்! தமது அந்தப் புதிய கோட்பாட்டின் ஊடாகத் தமிழர்களை அழித்தொழிக்கவு,ம் அவலமுறச் செய்யவும் அவர் திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்.

இந்தச் சூழ்ச்சியை முறியடிப்பதற்குத் தம்மை அர்ப்பணித்து உழைக்க வேண்டியது ஒவ்வொரு விடுதலை உணர்வுள்ள, தன்மானமுள்ள தமிழினதும் கடமையாகும். குறிப்பாக, எதிர்காலச் சந்ததியினரான இளைஞருக்கு இதில் பெரும் பொறுப்பும் பங்கும் உண்டு. இதனை அவர்கள் இப்போது உணர்ந்து செயற்படத் தவறின், அவர்களினதும், அவர்தம் பிள்ளைகளினதும் எதிர்காலம் சூன்யமாகிவிடும்.

# வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்வது வங்கியின் கடமை

## தலைமையகத்தை சாட்டிவிட்டு வாளா இருக்கலாமா?

வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதுதான் வங்கியாளர்களின் கடமை. இதை விட்டுவிட்டு தலைமை அலுவலகத்தையும், பாதுகாப்பு அமைச்சையும் சாட்டிக்கொண்டு வாளாவிருப்பது வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் செய்யும் அநீதியாகும்.

மேற்கண்டவாறு ''வங்கியாளர்களுக்கு ஒரு விண்ணப்பம்'' என்ற தலைப்பில் வாடிக்கையாளர்களால் விடுக்லப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு: -

நவீன வங்கித் தொழில் விருத்தியடைந்த நாடுகளில் மக்கள் மிக உயர்ந்த வங்கிப் பழக்க வழக்கம் உடையவர்களாகவும் இருப்பதால் பணமின்றி தமது கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக் கூடியதாக இருக்கிறது.

ஆனால் இங்கு நவீனத்துவம் புகுத்தப்பட்ட பின்னரும், குறிப்பாக வடக்கு - கிழக்கில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு இவை மறுக்கப்பட்ட நிலையில், அவர்களது கொடுக்கல்வாங்கல்களுக்கு திரவப்பணம் மிகவும் அவசியம். அதுவும் இன்று நிலவும் நிச்சயமற்ற சூழ்நிலையில் மக்கள் தமது சேமிப்புக்களில், குறிப்பிடத்தக்க தொகையை பணமாக கையில் வைத்திருக்கவே விரும்புவர். அது இயல்பானது. வங்கி வாடிக்கையாளரின் இவ்விருப்பத்தை பூர்த்திசெய்ய வேண்டியது வங்கிகளின் கடமை.

தலைமை அலுவலகத்தையும், பாதுகாப்பு அமைச்சையும் அவை அனுமதி அளிக்கவில்லை என்ற நொண்டிச் சாட்டுகளை வங்கியாளர்கள் சொல்லிவிட்டு வாளாவிருப்பது தமது வாடிக்கையாளர்களுக்குச் செய்யும் அநீதியல்லவா?

வர்த்தக வங்கித் தொழிலின் மிக முக்கியமான பணியே, வாடிக்கையாளர்களின் வைப்புக்களை ஏற்று அதில் இருந்து கடன் வழங்குவதன் மூலம் இலாபம் ஈட்டுவதுடன், வாடிக்கையாளர்கள் வைப்புக்களில் இருந்து பணம்பெற விரும்பும்போது, இல்லை என்று சொல்லாமல் மீளளித்து வாடிக்கையாளரது நம்பிக்கையைப் பெறுவதல்லவா?

### தினமும அவல காட்சிகள்

இன்று யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ்ப்பகுதிகளிலும் மக்கள் தமது கடுமையான உழைப்பில் தேடிய வருமானத்திலிருந்து வங்கிகளில் சேமித்த பணத்தைத் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய கொள்வனவுகளைச் செய்ய முடியாமல் வங்கிகளுக்கு அலைவதும் —

வங்கிகள் பணமாக வழங்க முடியாமல் வங்கிக் கட்டளைகளை வழங்க, அதற்கு தரகு பணம் கொடுத்து வர்த்தகர்களிடமிருந்து பணம் பெறுவதும்— நாளாந்த காட்சியாகிவிட்டது.

தமது சேமிப்புக்களை வங்கிகளில் வைத்திருந்ததை விட தங்கமாக வைத்திருந்தால்கூட இன்று விற்று பணமாக்கலாமே என்று மக்கள் அங்கலாய்ப்பதை எமது காதுகளினால் கேட்கக்கூடியதாக இருக்கிறது.

### கடந்த காலத் திட்டங்கள்

மக்களது சேமிப்புகளைத் திரட்டி முதலீடாக மாற்ற வங்கிகளுக்கூடாக எத்தனை வகையான சேமிப்புத் திட்டங்களையெல்லாம் அறிமுகப் படுத்தினீர்கள்.

★ மகளிர் பொற்கணக்கு சேமிப்புத் திட்டம் ஆரம்பமான போது வங்கிகளில் இருந்து பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், வேலைத் தளங்கள் என்று திரிந்து மக்களை அந்தத் திட்டத்தில் சேர்த்தீர்கள்.

★ சிறுபிள்ளைகளுக் கான சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி தமது சிறுவர்களின் எதிர் காலத்திற்காக பெரியவர்களை சேமிக்கத் தூண்டினீர்கள்.

★ பாடசாலை மாணவர்களுக்கு சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி பாடசாலைகளிலேயே போய்ப் பணம் சேமித்தீர்கள்

இவற்றையெல்லாம் செய்த போதும் யாழ்ப்பாண மக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவில்லை. இந்த மக்களின் சேமிப்பைத் திரட்டி தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி சிங்கள நாட்டின் முதலீட்டுக்கும், அபிவிருத்திக்கும் உதவினீர்கள் உங்கள் மேலாளர்களை திருப்தி செய்து நீங்களும் உங்கள் முன்னேற்றத்துக்கு வழிகோலினீர்கள். இதனைத் தவறு என்று கூற வரவில்லை.

ஆனால் இன்று உங்களது வாடிக்கையாளர்கள் தமது வைப்புகளில் உள்ள மீதியை பணமாகப் பெற என்ன கஷ்டப்படுகிறார்கள். அதுவும் இடம்பெயர்ந்து, சாதாரண வருமான வழிகளை இழந்து நிற்கின்ற இவ்வேளையில் அவர்களது சேமிப்புப்பணம் தானே கை கொடுக்க வேண்டும்?

அரசாங்க ஊழியருக்கு— ஓய்வூதியர்களுக்கு— அரசாங்கம் வழங்க வேண்டிய மாதாந்த கொடுப்பனவை பணமாகக் கொடுக்க மறுத்து காசோலைகளை வழங்கும் போது, மக்களின் உயிர் வாழ்விற்கு சேமிப்புப்பணம் தானே தேவைப்படுகிறது? மக்கள் ஏன் வங்கிக்கு பணம் பெற படையெடுக்கின்றார்கள் என்பது தெரிகின்றதல்லவா?

உங்களது வாடிக்கையாளர்களுக்கு நீங்கள் இழைப்பது துரோகமல்லவா?

உங்களது மேலாளர்களை இங்கு கொண்டு வாருங்கள். அல்லலுறும் மக்களுக்கு உதவுவது மனிதநேயம். இது ஒவ்வொரு வங்கியும் செய்ய வேண்டிய கடமை.

இந்த நேரத்தில் இந்தக் கடமையைச் செய்யத் தவறின் தமிழ் மக்களும் உங்கள் வாடிக்கையாளர்களும் உங்களை மன்னிக்கமாட்டார்கள்.

மற்றவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டு வாளாதிக்காமல் பல வழிகளையும் கையாண்டு நெருக்கடியைத் தீர்க்க முயற்சியுங்கள்.

முடியாவிடத்து நீங்கள் எடுத்த முயற்சியை மக்களுக்கு அம்பலப்படுத்துங்கள்.

அல்லலுறும் தமிழ் மக்களின் துயர் துடைக்க வங்கியாளர்களாகிய நீங்களும் உங்கள் பணியை செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் இதனை முடிக்கிறோம்

—இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வைப்பகத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளோர்

பின்வரும் விலாசதாரர்களை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதருமாறு நீதித்துறையினா அறிவித்துள்ளனர்.

★ ராஜதுங்கம் மகேந்திரன் (அதிபர், கொக்குவில் இ. கல்லூரி) — ரெம்பிள் வியூ, உரும்பராய் கிழக்கு, உரும்பராய்.

★ நீயோ முடியப்பு அந்தோனிப்பிள்ளை (சட்டத்தரணி) — 847, கடற்கரை வீதி, பாசையூர், யாழ்ப்பாணம்.

★ திருமதி பரமேஸ்வரி கணேசு — இல. 15, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ பூமணி கணபதிப்பிள்ளை — 31/2, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

★ தயாரூபி தேவராசா — 19, நாவலடி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

★ மாறியன் சொலமன் — 85, மவுண்ட்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தசாமி கோபாலகிருஷ்ணன் அல்லது கோபால கிருஷ்ணன் பிரபுராம் — கந்தசாமி அன் சன்ஸ் (நகைக்கடை), 206, காங்கேசன்துறை.

★ கா.த. மகாலிங்கம் — 37, வைமன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

★ எஸ். கிருஸ்ணசாமி — 29/4, புகையிரதநிலைய வீதி, புங்கன்குளம், அரியாலை, யாழ்ப்பாணம்.

★ வேலுப்பிள்ளை சின்னையா — 30/4, இலந்தைக்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

★ மரியஜெயராணி கதிஸ்லோஸ் — 13/6, தண்ணீர்தாங்கி வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

★ புஸ்பமலர் அன்ரனி — கல்வாரி தேவாலயம், பிறவுண் வீதி, கொக்குவில்.

★ நடராஜா ஜெயந்திரன் — புதிய மருந்துக்கடைக்கு அருகில், வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை.

★ நாகமுத்து சரவணமுத்து — அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

★ பொன்னையா சின்னையா — ஊரியான், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

★ நன்னியர் வேலுப்பிள்ளை அல்லது கனகம்மா வேலுப்பிள்ளை — மயிலங்காடு வீதி. புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

★ குமாரசாமி சதாசிவம் அல்லது நடராஜா இராஜசிறி — ஏழாலை கிழக்கு, ஏழாலை.

★ நாகலிங்கம் நடராசா அல்லது கனகம்மா நடராசா — அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

★ சடையர் முருகையா — தாவடி தெற்கு, கொக்குவில்.

★ தம்பு பரமசாமி — 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ ஆசைப்பிள்ளை சிவகுரு — வறுத்தலைவிளான், தெல்லிப்பளை.

★ லாசரஸ் நடராசா (ஜப்பான்) — ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

★ புஸ்பராணி விஸ்வலிங்கம் — ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

★ செல்லையா சண்முகநாதன் — 23, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

★ சின்னத்தம்பி கந்தசாமி (கண்ணுத்துரை) — சுழிபுரம் தெற்கு, சுழிபுரம்.

★ கமலாதேவி கணேசானந்தன் — தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலடி, மே/பா. மட்டுவில் விவசாயப் பண்ணை முகாம்.

நாளை 31ஆம் திகதி காலை 10-00 மணிக்கு கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு அழைக்கப்பட்டோர் விவரம்:-

★ சுப்பிரமணியம் கனகசபை — சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

★ திருமதி நாகேஸ்வரி செல்வநாயகம் — (ஞானாக்கா தையல் ஆசிரியை), 'சுமதி வாசா', 59, பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

★ கந்தையா தர்மலிங்கம் — நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ தம்பையா நவசிவாயம் — நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

★ திரு. தர்மலிங்கம் நடராஜா, திருமதி நடராஜா நல்லம்மா அல்லது திருமதி தர்மலிங்கம் மகேஸ்வரி (கிளி) — 52/4, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

(ஐ)

## மருதங்கேணி ஆஸ்பத்திரி இருளில் மூழ்கிக் கிடக்கிறது

தாளையடி, டிச. 30

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை இரவு நேரத்தில் இருளில் மூழ்கி [illegible] கின்றது.

அந்த வைத்தியசாலைக்கென கப்பலில் கொண்டு வரப்பட்ட புதிய ஜெனரேற்றர் பல மாதங்களாக வைத்தியசாலை [illegible] தூசி படிந்து கிடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி பொன்னையா

(முன்னாள் ஊழியர், பிரதேச செயலகம், சரசாலை.)

மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி பொன்னையா வெள்ளிக்கிழமை (29-12-95) காலமானார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், மோகனதாசன் (ப.நோ.கூ.ச. கொடிகாமம்), பிறேமதாசன் (பாண்டியன் - கிளிநொச்சி), பிறேமகலா, சிவதாசன் (லெபனான்), செல்வதாசன் (த. போ. க. பிரிவு), சந்திரகலா (த.போ.க. பிரிவு), தர்மகலா, குகதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைச்செல்வி, ஜமுனா, சுகந்தி( பிரதேச சபை, நல்லூர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(30-12-95) நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(39738)

## சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய P. W. D. ஓவசியர்)

ஓவசியர் ஒழுங்கை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இல. 23' பொஸ்வெல் பிளேஸ், வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான சிதம்பரப்பிள்ளை சிவசுப்பிரமணியம் 28- 12- 95 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் கணவரும், சிவாவிவேகானந்தன் (அமெரிக்கா), சண்முகநாதன் [லண்டன்], இந்திராதேவி (அவுஸ்திரேலியா), நிர்மலாதேவி [கொழும்பு], சர்வானந்தன் (இளைப்பாறிய தொழில் நுட்ப உத்தியோகஸ்தர். வீதி பராமரிப்பு ஒப்பந்தகாரர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை திணைக்களம், யாழ்ப்பாணம்), சியாமளாதேவி (கொழும்பு), செல்வதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி (அமெரிக்கா), விஜயலட்சுமி (லண்டன்), காலஞ்சென்ற பத்மநாதன் (C. T. B.) காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி (R. V. D. B.), மனோறஞ்சிதராணி, சர்வானந்தா (D. S. சேனநாயக்கா மகா வித்தியாலயம்), குணசீலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், மீனா, சிவாசண்முகநாதன், சுமதினி, மகிழினி, விதுர்ஷீ, விதுர்ஷன், கவிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. சர்வானந்தன்
(மகன்)

சி. சர்வானந்தன்
மே/பா. மா. தங்கராஜா
''ஸ்கந்தவாசா''
கைதடி

(39734)

## முருகேசு குமாரதாசன்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி)

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த முருகேசு குமாரதாசன் (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி) கொழும்பில் 28- 12- 95 இல் காலமானார்.

அன்னார் திருமதி கு. சரஸ்வதியின் அன்புக் கணவரும், பவானி, ஞானகாந்தன் (மருத்துவபீடம் கொழும்பு), உமாசங்கர் (மருத்துவபீடம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. கேதீஸ்வரன் (அரசினர் வைத்தியசாலை, கொழும்பு) அவர்களின் மாமனாரும், கீர்த்தனாவின் பேரனும், துரைதியாகராசா (கல்விப் பணிப்பாளர், வவுனியா), பாலசிங்கம் (ஆசிரியர் இந்து மகா வித்தியாலயம் கோண்டாவில்), சிவசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், மகோதலிங்கம், சிற்சபேசன், கமலாசினி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29 - 12 - 95 இல் கொழும்பில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
து. பாலசிங்கம்
(மைத்துனர்)

வேரக்கேணி கந்தசாமி கோவில்,
நுணாவில் தெற்கு,
சாவகச்சேரி.

(39736)

## ஓய்வூதியம்

டிசம்பர் மாத மலாயன், சிங்கப்பூர் ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் அந்தந்த வங்கிகளுக்கு நேரடியாக யாழ். செயலகத்தினால் அனுப்பப்பட்டுள்ளன.

## இனி அரசுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்ச பங்களிப்பு என்று தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

இன்று நாம் வரலாற்றுப் பாதையில் ஒரு முக்கிய நெருக்கடியான காலகட்டத்தை எதிர்கொண்டிருக்கின்றோம்.

வலிகாமத்திலிருந்தான மக்கள் இடம்பெயர்வு.பெரும்அவலத்தை ஏற்படுத்தி யுள்ளது.

எங்கள் மக்கள் வீடுகளை விட்டு — மண்ணை விட்டு — சொத்துக்களை இழந்து — தொழில்களை விட்டு— இடம் பெயர்ந்து அகதிகளாகி படும் துயரம், அவலம் மிக அதிகம்.

பெரியதோர் போராட்டத்திலே இப்படியான சம்பவங்கள் நிகழும்.

இடம் பெயர்ந்த மக்கள் உறுதியாக புலிகளுடன் நிற்கின்றனர்.

சிங்கள இராணுவத்துக்கு அடிமையாக வாழ விரும்பவில்லை என்பதை சிங்கள இனத்துக்கு எமது மக்கள் ஆணித்தரமாகக் கூறியிருக்கின்றனர்.

இதை உலகமும் இன்று அவதானித்துக் கொண்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை வெற்றியாக ஸ்ரீலங்கா அரசும், சிங்களவர்களும் கொண்டாடுவது அந்நிய தேசம் ஒன்றுக்கு மேற்கொண்ட படை எடுப்பு போலவே அமைந்திருக்கிறது.

தமிழர்களை தனது பிரசைகள் என்றும்—

யாழ்ப்பாணத்தை ஸ்ரீலங்காவின் ஒரு பகுதி என்றும்—

கூறும் அரசு அப்படியானால் ஏன் யாழ்ப்பாணத்தின் மீது படை எடுத்து தனது கொடியை நட வேண்டும்?

மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், அனுராதபுரத்திலும், வவுனியா மற்றும் சகல பகுதிகளிலும் இருந்து திரட்டப்பட்ட பெரும் எண்ணிக்கையான துருப்புக்களையும், படைபல சக்திகளையும் கொண்டு நடத்தப்பட்ட நடவடிக்கையின் முடிவாக 50 நாள்களின் பின்னர் பலாலி முதல் யாழ்ப்பாண நகர் வரையான 10 மைல் தூரத்தை சிங்களப் படைகள் கடந்தன.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் எழுச்சிகளும், வீழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தின் 2 ஆயிரம் வருட வரலாற்றில் முதல் தடவையாக இம்முறையே மக்கள் இல்லாத யாழ்ப்பாணம் வெறுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இல்லாத யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதானது ஸ்ரீலங்கா அரசின் தந்திரோபாயத்துக்கு கிடைத்த பெரியதொரு தோல்வி என்பதை இன்று உலகமே ஒப்புக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்திலே எங்களைப் பலப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது— என்றார்.

## காணவில்லை

வேலுப்பிள்ளை வத்சலா (வயது 25 - சுகயீன மானவர்) சுழிபுரம் மேற்கில் வசித்து தற்போது மாட்டு வளவு, முருகன் கோவில், மீசாலை கிழக்கு, மீசாலையில் தங்கியிருந்தார். அவரை 28-12-95 தொடக்கம் காணவில்லை. பெற்றோர் தேடுகின்றனர். அவர் குறித்துத் தகவல் தெரிந்தவர்கள் மேல் உள்ள முகவரியில் தெரிவிக்கவும். (39870)

## இடமாற்றம்

44, சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த ஆங்கில வைத்தியசாலை, இடைக்குறிச்சி, வரணி (வரணி ஆஸ்பத்திரி அருகாமையில்) இயங்கி வருகின்றதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறிய தருகிறோம்.

டாக்டர் திருமதி ப. கனகசுந்தரம்
(மாம்பழம்)

(39867)

## பாரதி பாலர் கழகம்

பாலருக்கான வகுப்புக்கள்
ஆரம்பம் **01–01 1996**
திங்கள் காலை 8. 30 மணி
புதிய மாணவர்களுக்கான அனுமதி
ஜனவரி 05 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இயக்குநர்சபை

இலங்கைவங்கி வீதி,
சாவகச்சேரி. 30-12-95 (39735)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பர் கனகரத்தினம்

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கந்தையா உபாத்தியாயர் வீதி கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் கனகரத்தினம் 28- 12- 95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், கணேசவேல் (புதைபொருள் ஆராய்ச்சி நிலையம், யாழ்ப்பாணம்), கதிர்காமவேல், தனபாலசிங்கம் (ஓமான்), கணேஸ்வரன் ஆகியோரின் தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
கணேசவேல்
(மகன்)

தற்போதைய முகவரி
ஐ. பத்மநாதன்
சரசாலை தெற்கு.
(பிரபாகரன் வீதி)

(39732)

## திருமதி சந்தியாப்பிள்ளை மேரி மாகிறெற்

(பூமணி)

யாழ்ப்பாணம் பாங்சால் வீதியைச் சேர்ந்த திருமதி சந்தியாப்பிள்ளை மேரி மாகிறெற் 29-12-95 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை (இராசதுரை) யின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அக்னெஸ், கசில்டா ஒலின்ரீனா (வவா), செல்வராணி (தேவி), ஆபிரகாம்லிங்கன் (லிங்கன் வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர்), ஜோன் ஒவ்பாக். காலஞ்சென்ற கெனமன் ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கமணி (வாத்தம்மா), சிந்தாமணி, காலஞ்சென்ற இராசேந்திரம் (குருசு), துரைச்சாமி, செல்லத்தம்பி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக முகமாலையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து இத்தாவில் சேமக் காலைக்கு இன்று (30-12-95) பகல் 11.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. புனிதசீலன் (மணி)
மருமகன்

(39737)

**மீண்டும் மக்கள் பணியில்!**

# யாழ். - வன்னி தொடர்பு சேவை

நீதிமன்றம் அருகில்,
தேவாலய ஒழுங்கை,
சாவகச்சேரி.

தபாலகம் அருகில்,
கிளிநொச்சி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 30-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org